1969 மார்ச் 26]

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) வெள்ளிக்குறி இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்

ஒரு வினாவிற்கு விடையளிக்கையில் உறுப்பினர் அவையில் இல்லாததால், அவர் அவைக்கு வந்த பின்னர் அவ்விடையை மீண்டும் அளிக்க கோரல்.

திரு. தி. தீர்த்தசிரிகவுண்டர்: ஆன் எ பாயிண்ட் ஆஃப் ஆர்டர், ஸார். நான் சபைக்குக் கொஞ்சம் தாமதமாக வந்த காரணத்தினால், என் பெயரில் கொடுக்கப்பட்ட 487-ம் எண்ணுள்ள கேள்வி எடுத்துக் கொள்ளப்பட்டபொழுது நான் சபையில் இல்லை. அந்தக் கேள்விக்கான பதிலின் விபரம் என்ன என்று அறிவதற்கு சபாநாயகர் அவர்கள் அனுமதி அளிக்கக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது பாயிண்ட் ஆஃப் ஆர்டர் ஆகாது.

திரு. தி. தீர்த்தகிரி கவுண்டர்: ஆன் எ பாயிண்ட் ஆஃப் கிளாரிபிகேஷன் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதற்கெல்லாம் இப்பொழுது இடமில்லை.

3. அறிவிப்புகள்

(அ) ஒற்றிவைப்புத் தீர்மானங்களை மறுநாளைக்கு எடுத்துக்கொள்ளல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு சோ. அழகர்சாமி, திரு. டி. மார்டின் ஆகிய இருவரும் இரண்டு ஒற்றிவைப்புத் தீர்மானங்கள் கொடுத்திருக்கிறார்கள். அவைகளை நாளைக்கு எடுத்துக்கொள்ளுகிறேன்.

4. அரசினர் தீர்மானம்

விதி 41(3)-ஐத் தளர்த்தல்

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, நான் கீழ்க் கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்:—

"சட்டப் பேரவையின் 244-வது விதியின் கீழ், 41-வது விதி மூன்றாவது உட்பிரிவின்படி ஒரே கூட்டத்தில் இரண்டுக்கு மேற்பட்ட காரியங்களைக் கொண்டுவரக்கூடாது என்பதைத் தளர்த்தவேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

5. கவன ஈர்ப்பு

(அ) பட்டுக்கோட்டையில் தீ விபத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் அளித்தல்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து: தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டம் பட்டுக்கோட்டை நகரில் 6—3—1969 அன்று நடந்த தீ விபத்தில் சிறு கடைக்காரர்கள், குடிசைகளில் வசிக்கும் ஏழைகளின் சொத்துக்கள் வீடுகள் சுமார் ஒரு லட்சம் பெறுமானமுள்ளவை சேதமடைந்துள்ளதால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் அளிக்க வேண்டியது பற்றிய அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

*மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: பட்டுக்கோட்டை நகரில் நகராட்சி எல்லையில் 6—3—1969 அன்று ஒரு தீ விபத்து ஏற்பட்டது. இதன் விளைவாக, மூன்று குடிசைகள், மூன்று தேனீர்க்கடைகள், மூன்று தையல் கடைகள், தொடக்கப்பள்ளிக் கட்டிடம் ஒன்று, ஒரு மளிகைக் கடை,